[2021] 3 எஸ் ஆர் சி 776

எம்/எஸ் கேனான் இந்தியா பிரைவேட் லிமிடெட்

எதிர்

சுங்கதுறை ஆணையர்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண்.1827 of 2018)

மார்ச் 09, 2021

[**மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு.எஸ். ஏ. பாப்டே.**

மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ. எஸ். போபண்ணா,

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.வி. ராமசுப்பிரமணியன்]

சுங்கவரிச் சட்டம், 1962: பிரிவுகள் 28 (4) – கேமராக்களின் சரக்கு – கேமராக்களின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேடு மற்றும் விளக்கக் கடிதத்துடன் சுங்க அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டிப்பதிவு – ஆய்வாளர் மற்றும் கண்காணிப்பாளரால் பட்டிப்பதிவு சரிபார்க்கப்பட்ட பிறகு, சுங்கத்துறை துணை ஆணையர் பொருட்களைச் சோதனையிட்டு, 17.3.2012 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு எண். 15/2012–ன் படி அந்தப் பொருட்களுக்கு வரிவிலக்கு அளித்து 24.3.2012 அன்று அவற்றை அனுமதிக்க முடிவெடுத்தார் – வேண்டுமென்றே கேமராங்களைப் பற்றிய தவறான விவரங்களைஅளிப்பதன் மூலமும் பொருண்மைகளை மறைப்பதன்

மூலமும் சுங்க அதிகாரிகள் கேமராக்களுக்கு அனுமதி அளிக்க துண்டியதாக குற்றம்சாட்டி வருவாய்துறை புலானய்வு இயக்ககத்தின் கூடுதல் தலைமை இயக்குநரால் 19.08.2014 அன்று பிரிவு 28(4)ன் கீழ் காரணம் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது – ஒரு சுங்கத்துறை துணை ஆணையர் அந்தப் பொருட்களுக்கு வரிவிலக்கு உண்டு என்று முடிவெடுத்து அவற்றை இறக்குமதிக்கு அனுமதித்த நிலையில், விதிக்கப்படவில்லை அல்லது செலுத்தப்படவில்லை என்று சொல்லப்படும் வரிகளை வசூலிப்பதற்காக, சட்டப்பிரிவு 28(4)–ன் கீழ் காரணம் கோரும் அறிவிப்பை வெளியிட வருவாய் புலனாய்வு இயக்குநரகத்திற்கு சட்டரீதியான அதிகாரம் உள்ளதா? – சட்டப்பிரிவு 28(4) என்பது கூட்டுச்சதி அல்லது வேண்டுமென்றே தவறாகக் கூறுதல் அல்லது பொருண்மைகளை மறைத்தல் ஆகியவற்றின் காரணமாகச் செலுத்தப்படாத, பகுதியாகச் செலுத்தப்பட்ட அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்ட வரியை வசூலிக்கும் அதிகாரத்தை 'அந்தச் தகுந்த அதிகாரிக்கு' வழங்குகிறது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது – இத்தகைய வரிகளை வசூலிக்கும் அதிகாரத்தை ஏதோ ஒரு தகுந்த அதிகாரிக்கு வழங்காமல், 'அந்தச் தகுந்த அதிகாரிக்கு' மட்டுமே வழங்க வேண்டும் என்பதே இதன் தெளிவான நோக்கமாகும் – நாடாளுமன்றம் ஏதேனும் தகுந்த அதிகாரி பிரிவு 28(4)–ன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்று கருதியிருந்தால், 'ஏதேனும்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை – நாடாளுமன்றம் 'தி' என்ற சுட்டை தற்செயலாகப் பயன்படுத்தவில்லை எனவும் மாறாக,

பொருட்கள் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அவற்றை மதிப்பீடு செய்த அந்தச் தகுந்த அதிகாரியையே குறிக்கும் நோக்கத்துடன் பயன்படுத்தியுள்ளது – அந்தச் தகுந்த அதிகாரி என்பவர், பொருட்களை அனுமதித்த அதே நபராகவே இருக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் அந்தப் பதவியில் அவருக்குப் பின் வந்தவராகவோ அல்லது அதே அலுவலகத்திற்குள் அதிகாரங்களைப் பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த அதிகாரியாகவோ இருக்கலாம் – முதல் நிலையில் பொருட்களை மதிப்பீடு செய்து அனுமதித்த அந்தச் தகுந்த அதிகாரியான மதிப்பீட்டுக் குழுவின் துணை ஆணையரைத்தான் குறிக்கும், டிஆர்ஜ–ன் தலைமை இயக்குநரை அல்ல என்பதால் இந்த அதிகாரம் குறிப்பாக 'அந்தச் தகுந்த அதிகாரி' மீதுதான் சுமத்தப்பட்டுள்ளது.

சுங்கவரிச் சட்டம், 1962: பிரிவு 28 (4) – மறுஆய்வு செய்யும் அதிகாரம் – பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இறக்குமதிக்காக அனுமதிக்கப்பட்ட பிறகு, செலுத்தப்படாத அல்லது குறைவாகச் செலுத்தப்பட்ட வரியை வசூலிப்பதற்கான அதிகாரத்தின் தன்மையானது, பரந்த அளவில் முந்தைய மதிப்பீட்டு முடிவை மறுஆய்வு செய்யும் அதிகாரமாகும் – இத்தகைய அதிகாரம் எந்தவொரு அதிகார அமைப்பிற்கும் இயல்பாகவே அமைந்த ஒன்று அல்ல – முக்கியமாக, முதல் நிலையில் பொருட்களை மதிப்பீடு செய்து அனுமதித்த அந்தச் தகுந்த அதிகாரியை குறிக்கும் இந்த அதிகாரம் குறிப்பாக "அந்தச் தகுந்த அதிகாரிக்கு" மட்டுமே

வழங்கப்பட்டுள்ளது – பொருட்களை அனுமதிக்க முடிவெடுத்தவரும் மற்றும் மதிப்பீடு செய்யத் தகுதியும் அதிகாரமும் கொண்டவருமான அந்த அசல் அதிகாரியால் வரி செலுத்தப்படவில்லை/விதிக்கப்படவில்லை என்ற காரணங்களுக்காக, அசல் மதிப்பீட்டு உத்தரவைப் பிறப்பிக்காத ஒரு அதிகாரி, அந்த மதிப்பீட்டை மீண்டும் தொடங்குவதற்கு அனுமதிப்பது முற்றிலும் அனுமதிக்க முடியாத ஒன்றாகும் – மதிப்பீட்டிலிருந்து விடுபட்ட வரிகளை வசூலிப்பதற்காகப் பிரிவு 28(4)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மையானது, ஒரு நடவடிக்கையை நிர்வாக ரீதியாக மறுஆய்வு செய்யும் தன்மையைக் கொண்டதாகும் – எனவே, அந்தப் பிரிவானது அத்தகைய மறுஆய்வு அதிகாரத்தை அதே அதிகாரிக்கோ அல்லது அவருக்குப் பின் வந்தவருக்கோ அல்லது மதிப்பீட்டுப் பணி ஒதுக்கப்பட்ட வேறு எந்த அதிகாரிக்கோ வழங்குவதாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும் – வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எந்த அதிகாரி மதிப்பீடு செய்தாரோ, அவர் மட்டுமே மறுமதிப்பீட்டை மேற்கொள்ள முடியும் – எனவே, பிரிவு 28(4)–ன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு டிஆர்ஜ–ன் கூடுதல் தலைமை இயக்குநர் "அந்த" தகுந்த அதிகாரி அல்ல என்பதும், இந்த வழக்கில் வரி வசூல் நடவடிக்கைகளைத் தொடங்கியது எந்தவொரு அதிகார வரம்பும் அற்றது என்பதால் நீக்கறவு செய்யப்படத்தக்கது என்பதும் தெளிவாகிறது – வரி/வரிவிதிப்பு.

சுங்கவரிச் சட்டம், 1962: பிரிவு 6 – கேமராக்கள் இறக்குமதி – சுங்கத்துறை துணை ஆணையர் பொருட்களைச் சோதனையிட்டு, அந்தப் பொருட்களுக்கு வரிவிலக்கு உண்டு எனத் தீர்மானித்து அவற்றை அனுமதிக்க முடிவெடுத்தார் – கேமராக்கள் குறித்த பொருண்மைகளை வேண்டுமென்றே தவறாகக் கூறியும் மற்றும் மறைத்தும் சுங்க அதிகாரிகளைத் தூண்டி கேமராக்கள் அனுமதிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டி, வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் சட்டப்பிரிவு 28(4)–ன் கீழ் காரணம் கோரும் அறிவிப்பை வெளியிட்டார் – டிஆர்ஐ–ன் கூடுதல் தலைமை இயக்குநர் ஒரு 'தகுந்த அதிகாரி' தானா? – கூடுதல் தலைமை இயக்குநரை ஒரு 'தகுந்த அதிகாரி'யாகக் கருத வேண்டுமானால், அவர் சுங்கச் சட்டத்தின் கீழ் ஒரு சுங்க அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைக் காட்ட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது – சட்டப்பிரிவு 28(4)–ன் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள மறுமதிப்பீடு மற்றும் வரி வசூல் நடவடிக்கையானது அதே அதிகார அமைப்பால் செய்யப்பட வேண்டுமே தவிர, மேல்முறையீட்டு அல்லது சீராய்வு அதிகார அமைப்பு போன்ற எந்தவொரு உயர் அதிகார அமைப்பாலும் செய்யப்படக் கூடாது என்பது தெளிவாகிறது – எனவே, பிரிவு 28(4)–ன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு டிஆர்ஐ–ன் கூடுதல் தலைமை இயக்குநர் 'அந்த' தகுந்த அதிகாரி அல்ல என்பது தெளிவாகிறது – மத்திய அரசின் அதிகாரிகளாக இருக்கும் வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் அதிகாரிகளிடம், சுங்க அதிகாரிகளின்

பணிகளை ஒப்படைக்க வேண்டும் என்று கருதப்பட்டிருந்தால், மத்திய அரசு அத்தியாவசியமாக அந்தச் சட்டத்தின் பிரிவு 6–ன் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவ்வாறு செய்திருக்க வேண்டும் – இந்த வழக்கைப் பொறுத்தவரை, அனைத்து விவகாரங்களிலும் டிஆர்ஐ–ன் கூடுதல் தலைமை இயக்குநரால் காரணம் கோரும் அறிவிப்புகளை வெளியிட்டதன் மூலம் தொடங்கப்பட்ட முழுமையான நடவடிக்கைகளும் சட்டப்பூர்வமான அதிகாரம் ஏதுமற்றவை மற்றும் செல்லாதவை எனவே அவை நீக்கறவு செய்யப்படத்தக்கவை, மேலும் அதன் தொடர்ச்சியாகப் பிறப்பிக்கப்பட்ட வரி நிலுவைக் கோரிக்கைகளும் நீக்கறவு செய்யப்படுகின்றன.

சுங்க வரிச் சட்டம், 1962 : பிரிவு 28(4) – காலவரையறை – பொருண்மைகளை மறைத்தல் – நீட்டிக்கப்பட்ட கால வரம்பைப் பயன்படுத்துதல் – பொருண்மையின்படி, இறக்குமதியாளர் 'முதல் சோதனைக்கு' கோரிக்கை விடுத்து, பட்டிப்பதிவு மற்றும் கேமராக்களின் மாதிரி விவரங்கள் அடங்கிய கையேடுகளுடன் கேமராக்களைக் காண்பித்துள்ளார் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது – சுங்க அதிகாரிகள் அந்த கேமராக்களை இயக்கிப் பார்த்து, ஒரு தொடர்ச்சியான பதிவின் கால அளவு எவ்வளவு என்பதையும், அந்தப் பதிவு கேமராவின் மொத்த நினைவகத்தையும் (கூடுதல் நினைவகம் உட்பட) தீர்த்துவிடுகிறதா என்பதையும், அந்த கேமராக்கள் வரிவிலக்கிற்குத் தகுதியானவையா என்பதையும் சோதித்திருக்க

முடியும் – இத்தகையச் சூழ்நிலைகளில், பொருண்மைகள் வேண்டுமென்றே தவறாகக் கூறப்பட்டன என்று சொல்ல முடியாது – எனவே, பிரிவு 28(4)–ன் கீழ் வழக்கை மீண்டும் தொடங்குவதற்கு, ஐந்து ஆண்டுகள் என்ற அந்த நீட்டிக்கப்பட்ட கால வரம்பைப் பயன்படுத்த எந்தவொரு அதிகாரிக்கும் அதிகாரம் இல்லை என்பது உறுதியாகிறது.

சட்டங்களின் பொருள் விளக்கம்: ஒரு காரியம் ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யப்பட வேண்டும் என்று சட்டம் கட்டளையிடும்போது, அது அந்த வழியில் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும் – சுங்கவரிச் சட்டம், 1962 – பிரிவு 28(4)."

சட்டங்களின் பொருள் விளக்கம்: ஒரு வகையத்தில் 'அந்த' என்ற சுட்டுச் சொல்லைப் பயன்படுத்துதல் – அந்த வகையத்தின் பொருள் விளக்கம்.

நீதிமன்றம் மேல்முறையீடுகளை அனுமதித்து தீர்ப்பளித்ததாவது:–

1.1 **சுங்கச்சட்டம் பிரிவு** 28(4)–**ஆனது, கூட்டுச்சதி அல்லது வேண்டுமென்றே தவறாகக் கூறுதல் அல்லது உண்மைகளை மறைத்தல் ஆகியவற்றின் காரணமாகச் செலுத்தப்படாத, பகுதியாகச் செலுத்தப்பட்ட அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்ட வரியை**

வசூலிக்கும் அதிகாரத்தை 'அந்தச் தகுந்த அதிகாரிக்கு' வழங்குகிறது. இத்தகைய வரிகளை வசூலிக்கும் அதிகாரத்தை ஏதோ ஒரு தகுந்த அதிகாரிக்கு வழங்காமல், 'அந்த தகுந்த அதிகாரிக்கு' மட்டுமே வழங்க வேண்டும் என்பதே இதன் தெளிவான நோக்கமாகும். [பத்தி 9][786-பி-சி]

ஒருங்கிணைக்கப்பட்ட காபி லிமிடெட் மற்றும் ஒருவர் எதிர் காபி போர்டு, பெங்களூர் (1980) 3 SCC 358: [1980] 3 SCR 625; திரு. இஷார் அலாய் ஸ்டீல் லிமிடெட் எதிர் ஜெயஸ்வால்ஸ் நெக்கோ லிமிடெட். (2001) 3 SCC 609 : [2001] 2 SCR 36 -சார்ந்துள்ளது

1.2 'ஏ (அல்லது அன்)' மற்றும் 'தி' என இரண்டு சுட்டுகள் மட்டுமே உள்ளன. 'ஏ (அல்லது அன்)' என்பது குறிப்பிடாத சுட்டு என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் ஒரு குறிப்பிட்ட நபரைக் குறிக்காது. மறுபுறம், 'தி' என்பது குறிப்பிட்ட சுட்டு என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது ஒரு குறிப்பிட்ட நபரையோ அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளையோ சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை, பிரிவு 28(4)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை 'யாராவது ஒரு தகுந்த அதிகாரி' பயன்படுத்தலாம் என்று நாடாளுமன்றம் கருதியிருந்தால், அவர்கள் 'ஏதாவது' என்ற வார்த்தையையே பயன்படுத்தியிருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. [பத்தி 10] [786-F-G]

1.3 நாடாளுமன்றம் 'தி' என்ற வார்த்தையைத் தற்செயலாகப் பயன்படுத்தவில்லை; மாறாக, பொருட்களை விடுவிக்கும்போது அவற்றை மதிப்பீடு செய்த அந்தச் தகுந்த அதிகாரியைக் குறிப்பிடும் நோக்கத்துடனேயே பயன்படுத்தியுள்ளது. அந்தச் தகுந்த அதிகாரி என்பவர், பொருட்களை விடுவித்த அதே தனிப்பட்ட அதிகாரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை; அவர் அதே பதவியில் அவருக்குப் பின் வந்தவராகவோ அல்லது அதே அலுவலகத்திற்குள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த அதிகாரியாகவோ இருக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இந்த வழக்கைப் பொறுத்தவரை, மதிப்பீட்டுக் குழுவிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட எவரும் இதில் அடங்குவர். 'மதிப்பீடு' என்பது, 1962-ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 2(2)(c)-ன் படி, சுங்கவரி விலக்கு அல்லது சலுகையைக் கருத்தில் கொண்டு, ஒரு பொருளுக்கு வரி விதிக்கத்தக்கதா மற்றும் அதன் வரி அளவு எவ்வளவு என்பதைத் தீர்மானிப்பதைக் குறிக்கும்.[பத்தி11][786-G-H787-A-B]

1.4 பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்ட பிறகு, செலுத்தப்படாத அல்லது குறைவாகச் செலுத்தப்பட்ட வரியை வசூலிக்கும் அதிகாரத்தின் தன்மையானது, அடிப்படையில் முந்தைய மதிப்பீட்டு முடிவை மறுபரிசீலனை செய்யும் அதிகாரமாகும். இத்தகைய அதிகாரம் எந்தவொரு அதிகாரிக்கும் இயல்பாகவே அமைந்துவிடுவதில்லை. உண்மையில், இது பிரிவு 28

மற்றும் பிற தொடர்புடைய வகையங்களின் மூலமாகவே வழங்கப்பட்டுள்ளது. முக்கியமாக, முதல் நிலையில் பொருட்களை மதிப்பீடு செய்து அனுமதித்த அந்தச் தகுந்த அதிகாரியை குறிக்கும் இந்த அதிகாரம் குறிப்பாக "அந்தச் தகுந்த அதிகாரிக்கு" மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. நிச்சயமாக இது இப்படித்தான் இருக்க வேண்டும் ஏனெனில், ஆரம்பத்தில் பொருட்களை மதிப்பீடு செய்ய முடிவெடுத்த அதிகாரியின் தகுதிக்குக் குறைவில்லாத மற்றொரு அதிகாரியைத் தவிர, வேறு ஒரு அதிகாரியிடம் மதிப்பீட்டை மீண்டும் தொடங்கும் அல்லது விடுபட்ட வரியை வசூலிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக எந்தவொரு நிதிச் சட்டமும் எங்களுக்குக் காட்டப்படவில்லை. [பத்தி 12] [787-B-D]

1.5 இந்த வழக்கைப் போலவே, ஒரு செயலைச் செய்வதற்கான ஒரே அதிகாரத்தை ஒரு சட்டம் வெவ்வேறு அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கும்போது, அந்த இரண்டு அதிகாரிகளும்-குறிப்பாக அவர்கள் வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்களாக இருக்கும்போது ஒரே வழக்கில் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. ஒரு அதிகாரி தனது மதிப்பீடு செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கும் பட்சத்தில், மறு-மதிப்பீடு செய்ய உத்தரவிடும் அதிகாரமும் அதே அதிகாரியால் அல்லது அவரது பதவிக்கு அடுத்து வந்தவரால் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும், அவர் அதே அந்தஸ்துள்ள அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தாலும், மற்றொரு துறையைச் சேர்ந்த வேறொரு அதிகாரியால் அந்த அதிகாரம்

பயன்படுத்தப்படக் கூடாது. எங்கள் பார்வையில், இது ஒரு சட்டத்தைச் சீர்குலைப்பதாகவும், கட்டுப்பாடற்ற முறையில் செயல்படுத்துவதாகவும் அமையும், எந்தவொரு சட்டவிளக்கக் விதிமுறையும் இத்தகையச் சூழலை எதிர்பார்க்கவில்லை. [பத்தி 13][787-E-F]

1.6 ஒரு சட்டம் ஒரு காரியத்தை ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யுமாறு கட்டளையிட்டால், அது அந்த வழியில் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இந்தப் பிரிவின் கீழ் 'அந்தச் தகுந்த அதிகாரி' மட்டுமே விதிக்கப்படாத அல்லது செலுத்தப்படாத வரியைத் தீர்மானிக்க முடியும் எனும்போது, அது ஏதோ ஒரு தகுந்த அதிகாரியைக் குறிக்காது, அந்த ஒரு குறிப்பிட்ட அதிகாரியை மட்டுமே குறிக்கும். பொருட்களை விடுவிக்க முடிவெடுத்த மற்றும் அந்த மதிப்பீட்டைச் செய்யத் தகுதியும் அதிகாரமும் கொண்டிருந்த அந்த ஆரம்பகால அதிகாரியால் எந்த வரி செலுத்தப்படவில்லை அல்லது விதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதோ, அதே மதிப்பீட்டை ஆரம்பகால மதிப்பீட்டு உத்தரவைப் பிறப்பிக்காத ஒரு அதிகாரி மீண்டும் விசாரிக்க அனுமதிப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என நாங்கள் கருதுகிறோம். மதிப்பீட்டிலிருந்து விடுபட்ட வரிகளை வசூலிப்பதற்காகப் பிரிவு 28(4)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மையானது, ஒரு செயலின் மீதான நிர்வாக மறுபரிசீலனை போன்றதாகும். எனவே, இந்தச் சட்டப்பிரிவானது அத்தகைய மறுபரிசீலனை அதிகாரத்தை அதே அதிகாரிக்கோ

அல்லது அவரது பதவிக்கு வருபவருக்கோ அல்லது மதிப்பீடு செய்யும் பணி ஒதுக்கப்பட்ட வேறு எந்த அதிகாரிக்கோ வழங்குவதாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மதிப்பீட்டைச் செய்த ஒரு அதிகாரி மட்டுமே மறு-மதிப்பீட்டை [இது பிரிவு 28(4)-ல் உள்ளடங்கியுள்ளது] மேற்கொள்ள முடியும். [பத்தி 14] [788-ஏ-சி]

1.7 பிரிவு 28(4)-ன் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி மறு-மதிப்பீடு மற்றும் வசூலித்தல் என்பது அதே அதிகார அமைப்பால் செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதும், மேல்முறையீட்டு அதிகாரி அல்லது சீராய்வு அதிகாரி போன்ற எந்தவொரு உயர் அதிகார அமைப்பாலும் செய்யப்பட வேண்டியது அல்ல என்பதும் வெளிப்படையானது. எனவே, பிரிவு 28(4)-ன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்த டிஆர்ஜ-ன் கூடுதல் தலைமை இயக்குநர் 'அந்த' தகுந்த அதிகாரி அல்ல என்பதும், தற்போதைய வழக்கில் தொடங்கப்பட்ட வரி வசூல் நடவடிக்கைகள் எவ்வித அதிகார வரம்பும் அற்றவை என்பதும் எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது, எனவே அவை நீக்கறவு செய்யப்படத்தக்கவை. [பத்தி 15][788-D-E]

2. பிரிவு 28(4)-ன் கீழ் வரி வசூல் அறிவிப்பை வெளியிட்ட டிஆர்ஜ-ன் கூடுதல் தலைமை இயக்குநர், ஒரு 'தகுந்த அதிகாரி' தானா?"

2.1 கூடுதல் தலைமை இயக்குநர் ஒரு 'தகுந்த அதிகாரி'யாகக் கருதப்பட வேண்டுமானால், அவர் சுங்கவரிச் சட்டத்தின் கீழ் ஒரு 'சுங்க அதிகாரி' என்று காட்டப்பட வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 6-ன் கீழ் 'தகுந்த அதிகாரி'க்குரிய பணிகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். டிஆர்ஜ-ன் கூடுதல் தலைமை இயக்குநர், சுங்கவரிச் சட்டத்தின் கீழ் ஒரு சுங்க அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதாகக் காட்டப்பட்டால் மட்டுமே, அவர் ஒரு சுங்க அதிகாரியாகக் கருதப்பட முடியும். [பத்தி 16][788-F]

2.2 மேலே உள்ள வரிசை எண் 3-ன் படி, சுங்கத்துறையின் ஒரு துணை ஆணையர் அல்லது உதவி ஆணையரிடம் பிரிவு 28-ன் கீழான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் நெடுவரிசை (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுக்கும், நெடுவரிசை (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளின் தகுதிக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதால், ஒரு துணை ஆணையர் அல்லது உதவி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள பிரிவு 28-ன் கீழான பணிகளைச் செய்வதற்குத் தகுதியுடைய ஒரு அதிகாரியாகச் சுங்கதுறை ஆணையரும் இதில் உள்ளடக்கப்படுவார் ஆனால், இந்த அறிவிப்பு தவறான அடிப்படையில் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. இந்த அறிவிப்பானது சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 2-ன் உட்பிரிவு (34)-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பிரிவு எந்தவொரு அதிகார அமைப்பிற்கும் அதிகாரிகளிடம் பணிகளை

ஒப்படைப்பதற்கான எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை. இந்த உட்பிரிவானது சட்டத்தின் வரையறை சட்டக்கூறின் ஒரு பகுதியாகும், இது ஒரு தகுந்த அதிகாரியை வரையறுக்க மட்டுமே செய்கிறது. மத்திய அல்லது மாநில அரசு அல்லது உள்ளூர் அதிகார அமைப்பின் பிற அதிகாரிகள் மீது சுங்க அதிகாரியின் பணிகளை ஒப்படைப்பதற்கு பிரிவு 6 மட்டுமே வழிவகை செய்கிறது. [பத்தி 19,20] [790–A–C, E]

2.3 மத்திய அரசின் அதிகாரிகளாக இருக்கும் வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் அதிகாரிகளிடம், சுங்கத்துறை அதிகாரிகளின் பணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருந்தால், மத்திய அரசு இந்தச் சட்டத்தின் பிரிவு 6–ன் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைச் செய்திருக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டிருப்பதற்கான காரணம் தெளிவானது ஏனெனில், நிதி அமைச்சகத்தால் 04.12.1957 தேதியிட்ட அறிவிப்பின் கீழ் அமைக்கப்பட்ட வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் அதிகாரிகள் மற்றும் 11.5.2002 வரை மத்திய அரசால் நியமிக்கப்பட்ட சுங்கத்துறை அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரையும் நியமிக்கும் அதிகாரம் கொண்ட அமைப்பு மத்திய அரசுதான். சுங்கவரிச் சட்டத்தின் கீழ் 'தகுந்த அதிகாரி'யாகப் பணிகளை ஒப்படைப்பதாகக் கூறும் அந்த அறிவிப்பானது, மத்திய கலால் வரிகள் மற்றும் சுங்க வாரியத்தால், அந்தச் சட்டத்தின் பிரிவு 2(34)–ன் கீழ் அத்தகைய அதிகாரம்

இல்லாத நிலையிலும் வெளியிடப்பட்டுள்ளது. அத்தகைய அதிகாரத்தை வழங்காத ஒரு பிரிவின் கீழ், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகக் கூறி, அதிகாரமில்லாத ஒரு அமைப்பால் வெளியிடப்பட்ட அந்த அறிவிப்பு வெளிப்படையாகவே செல்லாத ஒன்றாகும். [பத்தி 21][790–G–H; 791–A–B]

சுங்கத்துறை ஆணையர் எதிர். சையத் அலி மற்றும் ஒருவர் (2011) 3 SCC 537 : [2011] 2 SCR 1045 – சார்வுறப்பட்டுள்ளது

2.4 தற்போது நம் முன்னுள்ள அனைத்து விவகாரங்களிலும், டிஆர்ஜ–ன் கூடுதல் தலைமை இயக்குநரால் காரணம் கோரி அனுப்பப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் சட்ட அதிகாரம் ஏதுமின்றி வழங்கப்பட்டவை என்பதால் அவை செல்லாதவை என்றும், அவை நீக்கறவு செய்யப்படத்தக்கவை என்றும் நாம் தீர்ப்பளிக்கிறோம்; மேலும், அதன் விளைவாக எழுந்த கோரிக்கைகளும் நீக்கறவு செய்யப்படுகின்றன. [பத்தி 23][793–E]

3.1 காரணம் கோரும் அறிவிப்பு 19.8.2014 அன்று வழங்கப்பட்டது. பிரிவு 28(4)–ன் படி, வரி செலுத்தப்படாமல் இருந்தாலோ அல்லது குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தாலோ அல்லது கூட்டுச்சதி, வேண்டுமென்றே தவறாகக் கூறுதல் அல்லது உண்மைகளை மறைத்தல் ஆகியவற்றின் காரணமாகத் தவறாகத்

திரும்ப அளிக்கப்பட்டிருந்தாலோ, அத்தகைய அறிவிப்பு 'தொடர்புடைய தேதியிலிருந்து' அதாவது பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் வழங்கப்பட வேண்டும். எனவே, இங்கு உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய்வது அவசியமாகிறது. [பத்தி 24] [793-F-G]

3.2 இந்த வழக்கு, 20.3.2012 அன்று பட்டிபதிவு மற்றும் கேமராக்களின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேடுகள் ஆகியவற்றுடன் சுங்க அதிகாரிகளின் பரிசீலனைக்காக முன்வைக்கப்பட்டது. பட்டிப்பதிவில் சில்லறை விற்பனைக்காக பேக் செய்யப்பட்ட டிஜிட்டல் ஸ்டில் இமேஜ் வீடியோ கேமராக்கள் (கூல்பிக்ஸ் S4300, S2600 போன்றவை) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு ஆதாரமாகச் சமர்ப்பிக்கப்பட்ட கையேட்டில், '...நினைவக அட்டையில் நீண்ட நேரம் பதிவு செய்யப் போதுமான இடம் இருந்தாலும், ஒரு தனிப்பட்ட வீடியோவை அதிகபட்சமாக 29 நிமிடங்கள் மட்டுமே பதிவு செய்ய முடியும்' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது, கூடுதல் நினைவக வசதி அளிக்கும் அட்டையின் கொள்ளளவைப் பொறுத்து, ஒரு கேமரா ஒட்டுமொத்தமாக 29 நிமிடங்களுக்கு மேல் பதிவு செய்ய முடியும் என்றாலும், ஒரு தொடர்ச்சியான பதிவாக அதனால் 29 நிமிடங்கள் வரை மட்டுமே பதிவு செய்ய முடியும் என்று இது பொருள்படும். [பத்தி 25, 26][[793-H; 794-A-B]

3.3 வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அந்த கேமராவால் ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவுகளைச் செய்ய முடியும், ஆனால் ஒரே தொடர்ச்சியான பதிவாக 30 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் பதிவு செய்ய முடியாது. இந்த கேமரா வரிவிலக்கிற்கான நிபந்தனையைப் பூர்த்தி செய்கிறது அதாவது ஒரே தொடர்ச்சியான பதிவாக 30 நிமிடங்களுக்கும் குறைவாகவே பதிவு செய்கிறது என்ற முடிவை துணை ஆணையர் எடுத்தது இதிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த நிலையில், அந்தப் பொருட்களை வரிவிலக்கிற்குரியவை என அனுமதிப்பதில் துணை ஆணையர் எடுத்த முடிவு சரியானதா இல்லையா என்பது முக்கியமல்ல. மாறாக, இறக்குமதியாளர்கள் வேண்டுமென்றே தவறான தகவலைக் கூறினார்களா அல்லது உண்மைகளை மறைத்து பொருட்களைப் பெற்றுக்கொண்டார்களா என்பதைப் பார்ப்பதுதான் மிக முக்கியமானது [பத்தி 27][794-C-D]

3.4 இறக்குமதியாளர் 'முதல் சோதனை' செய்யுமாறு கோரியிருந்ததுடன், 20.3.2012 அன்று பட்டிப்பதிவு மற்றும் மாதிரிகளின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேடுகளுடன் கேமராக்களையும் சமர்ப்பித்திருந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஒரு தொடர்ச்சியான பதிவின் கால அளவு எவ்வளவு, அந்த ஒரு பதிவு கேமராவின் மொத்த நினைவகத்தையும் (கூடுதல் நினைவகம் உட்பட) தீர்த்துவிடுகிறதா மற்றும் அந்த கேமராக்கள் வரிவிலக்கிற்குத் தகுதியானவையா என்பதை அந்த

கேமராவை இயக்கிப் பார்த்தே கண்டறிந்திருக்க முடியும். இத்தகையச் சூழலில், உண்மைகள் வேண்டுமென்றே தவறாகக் கூறப்பட்டன என்று ஊகிப்பது கடினம். எனவே, இந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில், பிரிவு 28(4)-ன் கீழ் ஐந்தாண்டு கால நீட்டிக்கப்பட்ட காலவரம்பைப் பயன்படுத்தி வழக்கை மீண்டும் விசாரிப்பதற்கு எந்தவொரு அதிகார அமைப்பிற்கும் அதிகாரம் இல்லை என்பது உறுதியாகிறது. [பத்தி 28][794-E-F]

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

[1980] 3 SCR 625	**சார்வுறப்பட்டுள்ளது**	**பத்தி** 9
[2001] 2 SCR 36	**சார்வுறப்பட்டுள்ளது**	**பத்தி** 9
[2011] 2 SCR 1045	**சார்வுறப்பட்டுள்ளது**	**பத்தி** 22

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு; உரிமையியல் மேல்முறையீட்டு எண். 1827/2018.

புது தில்லியில் உள்ள சுங்கவரி, உற்பத்தி வரி மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின், சுங்கவரி மேல்முறையீடு எண் 50099/2017-ல், 19.12.2017 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவு எண் 58448/2017-லிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண். 1875, 1832, 3213/ 2018.

மேல்முறையீட்டாளருக்காக வி. லட்சுமிகுமாரன், எல். பத்ரி நாராயணன், சரண்யா லட்சுமிகுமாரன், ஆதித்யா பட்டாச்சார்யா, பவன் பூஷண், உஜ்வாலா உப்பலூரி, அபேக்ஷா மேத்தா, மவுனிகா கஸ்தூரி, சச்சின் சர்மா, ரூபேந்தர் சின்மர், கே. குருமூர்த்தி, உதிதா சிங் ஆகிய வழக்குரைஞர்கள் முன்னிலையானார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக சஞ்சய் ஜெயின், அரசு கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர், என். வெங்கடராமன், அரசு கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர், ஏ.கே.பாண்டா, மூத்த வழக்குரைஞர் நிஷா பாக்சி, மேருசாகர் சமந்தரே, ஷோவன் மிஸ்ரா, பி.வி. பல்ரம்தாஸ், பி. கிருஷ்ண பிரசாத் ஆகிய வழக்குரைஞர்கள் முன்னிலையானார்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு தலைமை நீதியரசர் **திரு.எஸ். ஏ. பாப்டே** அவர்களால் பகரப்பட்டது.

1. சுங்கவரி, உற்பத்தி வரி மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் 19 டிசம்பர் 2017 தேதியிட்ட பொதுவான இறுதி உத்தரவிலிருந்து ('எதிர்ப்புக்குள்ளான உத்தரவு') 1962–ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 130E–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தச் சட்டரீதியான மேல்முறையீடுகள்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 1827/2018, 1875/2018, 1832/2018 மற்றும் 3213/2018–களாக இருக்கக்கூடிய), எழுகின்றன.

2. எதிர்ப்புக்குள்ளான அந்த உத்தரவின்படி, நிகான் பிரைவேட் லிமிடெட், கேனான் பிரைவேட் லிமிடெட், சோனி பிரைவேட் லிமிடெட் மற்றும் சாம்சங் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களால் (இனி 'மேல்முறையீட்டாளர்கள்' அல்லது 'இறக்குமதியாளர்கள்' எனக் குறிப்பிடப்படுபவர்கள்) இறக்குமதி செய்யப்பட்ட டிஜிட்டல் ஸ்டில் இமேஜ் வீடியோ கேமராக்களுக்கு (டிஎஸ்ஐசி), வரி விலக்கு அறிவிப்பு எண். 20/2005–ன் படி (17.03.2012 தேதியிட்ட அறிவிப்பு எண் 15/2012–ல் திருத்தப்பட்டவாறு) வழங்கப்பட்டு வந்த அடிப்படைச் சுங்கவரி விலக்கு மறுக்கப்பட்டது மேலும், பொருட்களைப் பறிமுதல் செய்தல், வட்டியுடன் கூடிய வரி வசூலித்தல் மற்றும் அபராதம் விதித்தல் போன்ற சிஇஎஸ்டிஏடி–ன் முடிவுகளும் உறுதி செய்யப்பட்டன.

3. இந்த மேல்முறையீடுகள் அனைத்தும் பொதுவான கேள்விகளைக் கொண்டுள்ளதால், இவை ஒன்றாகச் சேர்த்துத் தீர்மானிக்கப்படுகின்றன வசதிக்காக, 'நிகான்' நிறுவனத்தின் வழக்கில் நடந்த நிகழ்வுகளை நாங்கள் மேற்கோள் காட்டுவோம்.

4. இந்த வழக்கின் முதன்மையான கேள்வி என்னவென்றால்: வரி விலக்கு அறிவிப்பு எண் 15/2012–ன் கீழ் அடிப்படைச்

சுங்கவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு கேமராக்கள் விடுவிக்கப்பட்ட பிறகு, வருவாய் புலனாய்வு இயக்குநரகம் செலுத்தப்படாத வரியை வசூலிப்பதற்காகச் சுங்கவரிச் சட்டம் 1962–ன் பிரிவு 28(4)–ன் கீழ் தொடங்கிய நடவடிக்கைகள் சட்டப்படி செல்லுபடியாகுமா? என்பதுதான்.

விலக்கு அறிவிப்பு;

5. டிஜிட்டல் ஸ்டில் இமேஜ் வீடியோ கேமராக்களுக்கான வரி விலக்கானது, 01.03.2005 தேதியிட்ட அறிவிப்பு எண் 25/2005–ன் வழியாக வெளியிடப்பட்டது (மேலும் 17.03.2012 அன்று அறிவிப்பு எண் 15/2012–ன் மூலம் திருத்தப்பட்டது).

பொருட்கள் வந்து சேர்ந்ததும், அவற்றுக்கு பூஜ்ஜிய வரி செலுத்தி அவற்றை விடுவிக்க எடுக்கப்பட்ட முடிவு.

6. சரக்கு பொருள் கேமராக்கள் 15.3.2012 அன்று டெல்லிக்கு வந்து சேர்ந்தது. இறக்குமதியாளர் 20.3.2012 அன்று சுங்க அதிகாரிகளிடம் பட்டிப்பதிவினை சமர்ப்பித்தார். அந்த பட்டிபதிவுடன், ஒரு மேல் கடிதத்தையும் மற்றும் கேமராக்களின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேட்டையும் இறக்குமதியாளர் சமர்ப்பித்தார். ஆய்வாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரால் பட்டிபதிவை சரிபார்க்கப்பட்ட பிறகு, இறக்குமதியாளர் 21.3.2012 அன்று சுங்கத்துறை துணை

ஆணையரிடம் முதல் கட்டப் பரிசோதனைக்கு கோரிக்கை விடுத்தார். சுங்க அதிகாரிகள் 24.3.2012 அன்று அந்தப் பொருட்களைப் பரிசோதித்தனர். அவர்கள் கையேட்டில் கொடுக்கப்பட்ட விவரங்களுடன் பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்து, 17.3.2012 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு எண் 15/2012–ன் படி, அவற்றுக்கு வரி விலக்கு உண்டு என 24.3.2012 அன்று பொருட்களை விடுவிக்க முடிவெடுத்தனர்.

<u>வரியினை மீட்டெடுப்பது</u>

7. கேமராக்கள் குறித்த உண்மைகளைத் திட்டமிட்டு மறைத்தும், தவறான தகவல்களைத் தந்தும், சுங்க அதிகாரிகளை ஏமாற்றி கேமராக்கள் விடுவிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டி, 19.08.2014 அன்று, 1962–ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 28(4)–ன் கீழ் ஒரு காரணம் கோரும் அறிவிப்பானது வழங்கப்பட்டது. குறிப்பாக,

––

எந்தவொரு சுங்கவரியும் (விதிக்கப்படாமல் இருந்தாலோ, அல்லது செலுத்தப்படாமல் இருந்தாலோ, அல்லது குறைவாக விதிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தாலோ), அல்லது தவறாகத் திரும்பப் பெறப்பட்டிருந்தாலோ, அல்லது செலுத்த வேண்டிய வட்டி செலுத்தப்படாமல் இருந்தாலோ; அது பின்வரும் காரணங்களால் நடந்திருந்தால்:

(அ) கூட்டுச் சதி ; அல்லது

(ஆ) திட்டமிட்ட தவறான அறிக்கை; அல்லது

(இ) உண்மைகளை மறைத்தல்,

இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர் அல்லது அவர்களின் முகவர் அல்லது ஊழியர் ஆகியோரால், தகுந்த அதிகாரி, தொடர்புடைய தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள், வரி அல்லது வட்டி செலுத்த வேண்டிய நபருக்கு– யாருக்கு வரி விதிக்கப்படவில்லையோ அல்லது யாரால் வரி செலுத்தப்படவில்லையோ அல்லது யாருக்குக் குறைவாக வரி விதிக்கப்பட்டதோ அல்லது யாரால் குறைவாக வரி செலுத்தப்பட்டதோ அல்லது யாருக்குத் தவறாக வரி திரும்ப அளிக்கப்பட்டதோ அவருக்கு–அவர் ஏன் அந்த அறிவிப்பு குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்தக்கூடாது என்பதற்கான காரணத்தை கோரி அறிவிப்பு அனுப்ப வேண்டும்.

––

அந்த கேமராக்கள் 30 நிமிடங்களுக்கும் குறைவான கால அளவு கொண்ட ஒன்றுக்கும் மேற்பட்ட வீடியோ தொகுப்புகளைத் தொடர்ந்து பதிவு செய்யும் திறன் கொண்டவை என்று கூறப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், 30 நிமிடங்களுக்கும் குறைவான ஒரு வீடியோ தொகுப்பு பதிவு செய்யப்பட்ட பிறகு, அத்தகைய மேலும் பல தொகுப்புகளைப் பதிவு செய்யத் தேவையான நினைவக வசதி (நீட்டிக்கக்கூடியது) அந்த கேமராவில் இருந்தது என்பதே அந்தப் புகாராகும்.

8. இங்கு கவனிக்கத்தக்க முக்கியமான விஷயம் என்னவென்றால் அறிவிப்பு எண் 15/2012–ன் கீழ் சுங்கவரி விலக்கு அளிக்கப்பட்டதால், அந்தப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும் முடிவை டெல்லி ஏர் கார்கோ, மதிப்பீட்டுக் குழுவின்) துணை ஆணையர் எடுத்தார் ஆனால், அந்தப் பொருட்களுக்கான

காரணம் கோரும் அறிவிப்பை வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் வழங்கியுள்ளார்.

9. ஒரு சுங்கத்துறை துணை ஆணையர் அந்தப் பொருட்களுக்கு வரி விலக்கு உண்டு எனத் தீர்மானித்து, அவற்றை இறக்குமதி செய்ய அனுமதித்த பிறகு, விதிக்கப்படாத அல்லது செலுத்தப்படாத வரிகளை வசூலிப்பதற்காக, வருவாய் புலனாய்வு இயக்குநரகம் சட்டப்பிரிவு 28(4)–ன் கீழ் காரணம் கோரும் அறிவிப்பை வழங்க சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ளதா? என்பதே எழும் கேள்வியாகும். இதற்கான பதில், அந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்திலிருந்து, அதாவது அந்தச் சட்டத்தின் பிரிவு 28(4)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திலிருந்தே வர வேண்டியது அவசியமாகும். இந்தச் சட்டப்பிரிவு, கூட்டுச்சதி, திட்டமிட்ட தவறான அறிக்கை அல்லது உண்மைகளை மறைத்தல் ஆகியவற்றின் காரணமாகச் செலுத்தப்படாத அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்ட வரியை வசூலிக்கும் அதிகாரத்தை 'தகுந்த அதிகாரி' என்பவருக்கு வழங்குகிறது. இத்தகைய வரிகளை வசூலிக்கும் அதிகாரத்தை எந்தவொரு தகுந்த அதிகாரியிடமும் வழங்காமல், அதற்கென குறிப்பிட்ட தகந்த அதிகாரியிடம் மட்டுமே வழங்க வேண்டும் என்பதே தெளிவான நோக்கமாகும். **கன்சோலிடேட்டட் காபி லிமிடெட் மற்றும் ஒருவர் எதிர் காபி வாரியம், பெங்களூர்** (1980) 3 SCC 358 வழக்கில் இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது.

"14. ...இரண்டாவதாக, மிக முக்கியமாக, 'ஒப்பந்தம்' என்ற வார்த்தைக்கு முன்னால் 'தி' (the) என்ற குறிப்பிட்ட சுட்டு பயன்படுத்தியிருப்பது, எங்கள் பார்வையில் மிகவும் குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றம் ஏற்றுமதி தொடர்பான 'ஓர் ஒப்பந்தம்' என்றோ அல்லது 'ஏதாவது ஓர் ஒப்பந்தம்' என்றோ கூறவில்லை; இந்தச் சூழலில், 'அந்த ஒப்பந்தம்' என்ற வெளிப்பாடு, ஏற்றுமதிக்கான விற்பனையில் மறைமுகமாகத் தொடர்புடைய 'அந்த' குறிப்பிட்ட ஒப்பந்தத்தையே குறிக்கும்.

ஸ்ரீ இஷார் அலாய் ஸ்டீல்ஸ் லிமிடெட் எதிர் ஜெயஸ்வால்ஸ் நெக்கோ லிமிடெட். *(2001) 3 SCC 609 ஆகியவற்றில் பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.*

9. ...'தி' என்பது பெயர்ச்சொற்களுக்கு முன்னால் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையாகும்; இது 'ஏ'(a) அல்லது 'அன்' (an) போன்ற பொதுவான சொற்களுக்கு மாறாக, ஒரு குறிப்பிட்ட அல்லது தனித்துவமான விளைவை ஏற்படுத்துகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட விஷயம் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இது தீர்மானிக்கிறது; அதாவது, எந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. 'தி' என்பது எப்போதும் ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபரையோ குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது.

10. 'ஏ (அல்லது அன்)' மற்றும் 'தி' என இரண்டு சுட்டுகள் மட்டுமே உள்ளன. 'ஏ (அல்லது அன்)' என்பது குறிப்பிடாத சுட்டு என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் ஒரு குறிப்பிட்ட நபரைக் குறிக்காது. மறுபுறம், 'தி' என்பது குறிப்பிட்ட சுட்டு என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது ஒரு குறிப்பிட்ட நபரையோ அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளையோ சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை, பிரிவு 28(4)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை 'யாராவது ஒரு தகுந்த அதிகாரி' பயன்படுத்தலாம் என்று நாடாளுமன்றம் கருதியிருந்தால், அவர்கள் 'ஏதாவது' என்ற வார்த்தையையே பயன்படுத்தியிருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

பிரிவு 2. வரையறைகள் – இந்தச் சட்டத்தில், சூழல் வேறுவிதமாகத் தேவைப்பட்டாலன்றி:

...

(2) "மதிப்பீடு" என்பது, இந்தச் சட்டத்தின் கீழோ அல்லது 1975-ஆம் ஆண்டு சுங்கவரித் தீர்வைச் சட்டத்தின் கீழோ அல்லது தற்போது அமலில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் கீழோ, பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு, ஒரு பொருளின் மீதான வரி விதிப்புத் தன்மை மற்றும் செலுத்த வேண்டிய வரி, வரிவிதிப்பு, மேல்வரி அல்லது இதர தொகைகளைத் தீர்மானிப்பதாகும்:

(அ) ...

(ஆ) ...

(இ) இந்தச் சட்டத்தின் கீழோ அல்லது சுங்கவரித் தீர்வைச் சட்டத்தின் கீழோ அல்லது தற்போது அமலில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் கீழோ

வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் விளைவாகக் கிடைக்கக்கூடிய வரிவிதிப்பு, மேல்வரி, இதர தொகை, வரி விலக்கு, அல்லது வரிச் சலுகை,

---

11. நாடாளுமன்றம் 'தி' என்ற வார்த்தையைத் தற்செயலாகப் பயன்படுத்தவில்லை; மாறாக, பொருட்களை விடுவிக்கும்போது அவற்றை மதிப்பீடு செய்த அந்தச் தகுந்த அதிகாரியைக் குறிப்பிடும் நோக்கத்துடனேயே பயன்படுத்தியுள்ளது. அந்தச் தகுந்த அதிகாரி என்பவர், பொருட்களை விடுவித்த அதே தனிப்பட்ட அதிகாரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை; அவர் அதே பதவியில் அவருக்குப் பின் வந்தவராகவோ அல்லது அதே அலுவலகத்திற்குள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த அதிகாரியாகவோ இருக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இந்த வழக்கைப் பொறுத்தவரை, மதிப்பீட்டுக் குழுவிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட எவரும் இதில் அடங்குவர். 'மதிப்பீடு' என்பது, 1962-ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 2(2)(c)-ன் படி, சுங்கவரி விலக்கு அல்லது சலுகையைக் கருத்தில் கொண்டு, ஒரு பொருளுக்கு வரி விதிக்கத்தக்கதா மற்றும் அதன் வரி அளவு எவ்வளவு என்பதைத் தீர்மானிப்பதைக் குறிக்கும்.

12. பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்ட பிறகு, செலுத்தப்படாத அல்லது குறைவாகச் செலுத்தப்பட்ட வரியை வசூலிக்கும் அதிகாரத்தின் தன்மையானது,

அடிப்படையில் முந்தைய மதிப்பீட்டு முடிவை மறுபரிசீலனை செய்யும் அதிகாரமாகும். இத்தகைய அதிகாரம் எந்தவொரு அதிகாரிக்கும் இயல்பாகவே அமைந்துவிடுவதில்லை. உண்மையில், இது பிரிவு 28 மற்றும் பிற தொடர்புடைய வகையங்களின் மூலமாகவே வழங்கப்பட்டுள்ளது. முக்கியமாக, முதல் நிலையில் பொருட்களை மதிப்பீடு செய்து அனுமதித்த அந்தச் தகுந்த அதிகாரியை குறிக்கும் இந்த அதிகாரம் குறிப்பாக "அந்தச் தகுந்த அதிகாரிக்கு" மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. நிச்சயமாக இது இப்படித்தான் இருக்க வேண்டும் ஏனெனில், ஆரம்பத்தில் பொருட்களை மதிப்பீடு செய்ய முடிவெடுத்த அதிகாரியின் தகுதிக்குக் குறைவில்லாத மற்றொரு அதிகாரியைத் தவிர, வேறு ஒரு அதிகாரியிடம் மதிப்பீட்டை மீண்டும் தொடங்கும் அல்லது விடுபட்ட வரியை வசூலிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக எந்தவொரு நிதிச் சட்டமும் எங்களுக்குக் காட்டப்படவில்லை.

13. இந்த வழக்கைப் போலவே, ஒரு செயலைச் செய்வதற்கான ஒரே அதிகாரத்தை ஒரு சட்டம் வெவ்வேறு அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கும்போது, அந்த இரண்டு அதிகாரிகளும்–குறிப்பாக அவர்கள் வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்களாக இருக்கும்போது ஒரே வழக்கில் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. ஒரு அதிகாரி தனது மதிப்பீடு செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கும் பட்சத்தில், மறு–மதிப்பீடு செய்ய உத்தரவிடும் அதிகாரமும் அதே அதிகாரியால் அல்லது அவரது பதவிக்கு அடுத்து

வந்தவரால் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும், அவர் அதே அந்தஸ்துள்ள அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தாலும், மற்றொரு துறையைச் சேர்ந்த வேறொரு அதிகாரியால் அந்த அதிகாரம் பயன்படுத்தப்படக் கூடாது. எங்கள் பார்வையில், இது ஒரு சட்டத்தைச் சீர்குலைப்பதாகவும், கட்டுப்பாடற்ற முறையில் செயல்படுத்துவதாகவும் அமையும், எந்தவொரு சட்டவிளக்கக் விதிமுறையும் இத்தகையச் சூழலை எதிர்பார்க்கவில்லை.

14. ஒரு சட்டம் ஒரு காரியத்தை ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யுமாறு கட்டளையிட்டால், அது அந்த வழியில் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இந்தப் பிரிவின் கீழ் 'அந்தச் தகுந்த அதிகாரி' மட்டுமே விதிக்கப்படாத அல்லது செலுத்தப்படாத வரியைத் தீர்மானிக்க முடியும் எனும்போது, அது ஏதோ ஒரு தகுந்த அதிகாரியைக் குறிக்காது, அந்த ஒரு குறிப்பிட்ட அதிகாரியை மட்டுமே குறிக்கும். பொருட்களை விடுவிக்க முடிவெடுத்த மற்றும் அந்த மதிப்பீட்டைச் செய்யத் தகுதியும் அதிகாரமும் கொண்டிருந்த அந்த ஆரம்பகால அதிகாரியால் எந்த வரி செலுத்தப்படவில்லை அல்லது விதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதோ, அதே மதிப்பீட்டை ஆரம்பகால மதிப்பீட்டு உத்தரவைப் பிறப்பிக்காத ஒரு அதிகாரி மீண்டும் விசாரிக்க அனுமதிப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என நாங்கள் கருதுகிறோம். மதிப்பீட்டிலிருந்து விடுபட்ட வரிகளை வசூலிப்பதற்காகப் பிரிவு 28(4)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள

அதிகாரத்தின் தன்மையானது, ஒரு செயலின் மீதான நிர்வாக மறுபரிசீலனை போன்றதாகும். எனவே, இந்தச் சட்டப்பிரிவானது அத்தகைய மறுபரிசீலனை அதிகாரத்தை அதே அதிகாரிக்கோ அல்லது அவரது பதவிக்கு வருபவருக்கோ அல்லது மதிப்பீடு செய்யும் பணி ஒதுக்கப்பட்ட வேறு எந்த அதிகாரிக்கோ வழங்குவதாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மதிப்பீட்டைச் செய்த ஒரு அதிகாரி மட்டுமே மறு–மதிப்பீட்டை [இது பிரிவு 28(4)–ல் உள்ளடங்கியுள்ளது] மேற்கொள்ள முடியும்.

15. பிரிவு 28(4)–ன் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி மறு–மதிப்பீடு மற்றும் வசூலித்தல் என்பது அதே அதிகார அமைப்பால் செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதும், மேல்முறையீட்டு அதிகாரி அல்லது சீராய்வு அதிகாரி போன்ற எந்தவொரு உயர் அதிகார அமைப்பாலும் செய்யப்பட வேண்டியது அல்ல என்பதும் வெளிப்படையானது. எனவே, பிரிவு 28(4)–ன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்த டிஆர்ஜ–ன் கூடுதல் தலைமை இயக்குநர் 'அந்த' தகுந்த அதிகாரி அல்ல என்பதும், தற்போதைய வழக்கில் தொடங்கப்பட்ட வரி வசூல் நடவடிக்கைகள் எவ்வித அதிகார வரம்பும் அற்றவை என்பதும் எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது, எனவே அவை நீக்கறவு செய்யப்படத்தக்கவை.

16. இந்த நிலையில், பிரிவு 28(4)–ன் கீழ் வரி வசூல் நோட்டீஸை வழங்கிய டிஆர்ஜ–ன் கூடுதல் தலைமை இயக்குநர் ஒரு

'தகுந்த அதிகாரி'தானா என்பதையும் நாம் பரிசோதிக்க வேண்டும். கூடுதல் தலைமை இயக்குநர் ஒரு 'தகுந்த அதிகாரி'யாகக் கருதப்பட வேண்டுமானால், அவர் சுங்கவரிச் சட்டத்தின் கீழ் ஒரு 'சுங்க அதிகாரி' என்று காட்டப்பட வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 6–ன் கீழ் 'தகுந்த அதிகாரி'க்குரிய பணிகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். டிஆர்ஐ–ன் கூடுதல் தலைமை இயக்குநர், சுங்கவரிச் சட்டத்தின் கீழ் ஒரு சுங்க அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதாகக் காட்டப்பட்டால் மட்டுமே, அவர் ஒரு சுங்க அதிகாரியாகக் கருதப்பட முடியும்.

17. கற்றறிந்த கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் திரு. சஞ்சய் ஜெயின் அவர்கள், 07.03.2002 தேதியிட்ட அறிவிப்பு எண். 17/2002 – சுங்கம் (என்டி)–ஐ முன்வைத்து, டிஆர்ஐ–ன் அனைத்து கூடுதல் தலைமை இயக்குநர்களும் சுங்கத்துறை ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் காட்டினார். சம்பந்தப்பட்ட அந்த நேரத்தில், இத்தகைய அறிவிப்பை வெளியிடுவதற்கு மத்திய அரசே தகுந்த அதிகார அமைப்பாக இருந்தது. இந்த அறிவிப்பானது, நெடுவரிசை (2)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கூடுதல் தலைமை இயக்குநர்களும் சுங்கத்துறை ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

18. அடுத்த கட்டமாக, 07.03.2002 தேதியிட்ட அறிவிப்பின் கீழ் சுங்க அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள ஒரு டிஆர்ஐ–ன் கூடுதல்

தலைமை இயக்குநரிடம், சுங்கவரிச் சட்டத்தின் கீழ் ஒரு 'சரியான அதிகாரி'யாகப் பிரிவு 28–ன் கீழ் உள்ள பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 28–ன் கீழ் ஒரு தகுந்த அதிகாரிக்குரிய பணிகள் அவரிடம் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன என்ற வாதத்திற்கு ஆதரவாக, கற்றறிந்த கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் திரு. சஞ்சய் ஜெயின் அவர்கள், மத்திய கலால் வரிகள் மற்றும் சுங்க வாரியத்தால் 02.05.2012 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு எண். 40/2012–ஐ முன்வைத்தார். இந்த அறிவிப்பானது, அதில் உள்ள நெடுவரிசை (2)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு, நெடுவரிசை (3)–ல் குறிப்பிடப்பட்டுள்ள சுங்கவரிச் சட்டத்தின் பல்வேறு பணிகளை வழங்குகிறது. அந்த அறிவிப்பின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு :–

[இந்திய அரசிதழ், சிறப்பு, பகுதி II, பிரிவு 3, உட்பிரிவு (ii)–ல் வெளியிடப்பட வேண்டியது]

இந்திய அரசாங்கம்

நிதி அமைச்சகம்

(வருவாய்த் துறை)

அறிவிப்பு எண்.40/2012–சுங்கம் (N.T.)

புது தில்லி, மே 2, 2012 தேதியிட்டது

எஸ்.ஓ. (இ). – 1962–ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் (1962–ன் 52) பிரிவு 2–ன் உட்பிரிவு (34)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய கலால் வரிகள் மற்றும் சுங்க வாரியம், கீழே உள்ள அட்டவணையின் நெடுவரிசை (2)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அந்தத் தகுதிக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கு, அதே அட்டவணையின் நெடுவரிசை (3)–ல் அதற்கு நேராகக் கொடுக்கப்பட்டுள்ள 1962–ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் தொடர்பான பணிகளைச் 'தகுந்த அதிகாரிகள்' என ஒப்படைக்கிறது: –

வரிசை எண்	அதிகாரிகளின் பதவிகள்	சுங்கச் சட்டம் 1962 இன் பிரிவின் கீழ் செயல்பாடுகள்
(1)	(2)	(3)
1.	சுங்க துறை ஆணையர்	(i) பிரிவு 33
2.	கூடுதல் ஆணையர் அல்லது சுங்கதுறை இணை ஆணையர்	(i) பிரிவு 46–ன் உட்பிரிவு (5); மற்றும் பிரிவு 149
3.	துணை ஆணையர் அல்லது சுங்க துறை மற்றும் மத்திய கலாலின் உதவி ஆணையர்	(i) ……. (ii) ……. (iii) ……. (iv) ……. (v) ……. (vi) பிரிவு 28 ; .....

19. மேலே உள்ள வரிசை எண் 3–ன் படி, சுங்கத்துறையின் ஒரு துணை ஆணையர் அல்லது உதவி ஆணையரிடம் பிரிவு 28–ன் கீழான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தப் பணிகள் நெடுவரிசை (3)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுக்கும், நெடுவரிசை (2)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளின் தகுதிக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதால், ஒரு துணை ஆணையர் அல்லது உதவி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள பிரிவு 28–ன் கீழான பணிகளைச் செய்வதற்குத் தகுதியுடைய ஒரு அதிகாரியாகச் சுங்கதுறை ஆணையரும் இதில் உள்ளடக்கப்படுவார் ஆனால், இந்த அறிவிப்பு தவறான அடிப்படையில் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. இந்த அறிவிப்பானது சுங்கவரிச் சட்டத்தின் பிரிவு 2–ன் உட்பிரிவு (34)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பிரிவு எந்தவொரு அதிகார அமைப்பிற்கும் அதிகாரிகளிடம் பணிகளை ஒப்படைப்பதற்கான எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை. இந்த உட்பிரிவானது சட்டத்தின் வரையறைப் சட்டக்கூறு ஒரு பகுதியாகும்; இது வெறும் 'தகுந்த அதிகாரி' என்பவரை மட்டுமே வரையறுக்கிறது, அது பின்வருமாறு:

> 2. வரையறைகள் – இந்தச் சட்டத்தில், சூழல் வேறுவிதமாகத் தேவைப்பட்டாலன்றி:
>
> ...

(34) 'தகுந்த அதிகாரி' என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட வேண்டிய பணிகளைப் பொறுத்தவரை, வாரியத்தாலோ அல்லது [சுங்கத்துறை முதன்மை ஆணையர் அல்லது சுங்கத்துறை ஆணையராலோ] அந்தப் பணிகள் ஒதுக்கப்பட்ட சுங்க அதிகாரியைக் குறிக்கும்."

20. மத்திய அல்லது மாநில அரசு அல்லது உள்ளூர் அதிகார அமைப்பின் பிற அதிகாரிகளிடம் சுங்க அதிகாரியின் பணிகளை ஒப்படைப்பதற்கு வழிவகை செய்யும் ஒரே பிரிவு, பிரிவு 6 ஆகும்; அது பின்வருமாறு;

6. வாரியம் மற்றும் சுங்க அதிகாரிகளின் பணிகளை வேறு சில அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் – மத்திய அரசு, அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடும் அறிவிப்பின் வாயிலாக, நிபந்தனைகளுடனோ அல்லது நிபந்தனைகளற்றோ, மத்திய அல்லது மாநில அரசு அல்லது உள்ளூர் அதிகார அமைப்பைச் சேர்ந்த எந்தவொரு அதிகாரியிடமும், இந்தச் சட்டத்தின் கீழான வாரியத்தின் அல்லது எந்தவொரு சுங்க அதிகாரியின் பணிகளையும் ஒப்படைக்கலாம்.

21. மத்திய அரசின் அதிகாரிகளாக இருக்கும் வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் அதிகாரிகளிடம், சுங்கத்துறை அதிகாரிகளின் பணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று

உத்தேசிக்கப்பட்டிருந்தால், மத்திய அரசு இந்தச் சட்டத்தின் பிரிவு 6–ன் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைச் செய்திருக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டிருப்பதற்கான காரணம் தெளிவானது ஏனெனில், நிதி அமைச்சகத்தால் 04.12.1957 தேதியிட்ட அறிவிப்பின் கீழ் அமைக்கப்பட்ட வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் அதிகாரிகள் மற்றும் 11.5.2002 வரை மத்திய அரசால் நியமிக்கப்பட்ட சுங்கத்துறை அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரையும் நியமிக்கும் அதிகாரம் கொண்ட அமைப்பு மத்திய அரசுதான். சுங்கவரிச் சட்டத்தின் கீழ் 'தகுந்த அதிகாரி'யாகப் பணிகளை ஒப்படைப்பதாகக் கூறும் அந்த அறிவிப்பானது, மத்திய கலால் வரிகள் மற்றும் சுங்க வாரியத்தால், அந்தச் சட்டத்தின் பிரிவு 2(34)–ன் கீழ் அத்தகைய அதிகாரம் இல்லாத நிலையிலும் வெளியிடப்பட்டுள்ளது. அத்தகைய அதிகாரத்தை வழங்காத ஒரு பிரிவின் கீழ், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகக் கூறி, அதிகாரமில்லாத ஒரு அமைப்பால் வெளியிடப்பட்ட அந்த அறிவிப்பு வெளிப்படையாகவே செல்லாத ஒன்றாகும்.

22. மேற்கூறிய சூழலில், **'கமிஷனர் ஆஃப் கஸ்டம்ஸ் எதிர் சையத் அலி மற்றும் ஒருவர் (2011) 3 SCC 537'** வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அந்த வழக்கில், ஒரு குறிப்பிட்ட அதிகார வரம்பிற்குட்பட்ட 'தகுந்த அதிகாரி' குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. அந்தப் பரிசீலனை பின்வருமாறு:–

16. தற்போதைய வழக்கில், இறக்குமதி அறிக்கை மற்றும் பட்டிபதிவு ஆகியவை மும்பை சுங்கத்துறை கூடுதல் ஆட்சியர் (இறக்குமதி) முன்பாகத் தாக்கல் செய்யப்பட்டன; பட்டிபதிவு முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு, இறக்குமதியாளர் ஒரு பிணையப் பத்திரத்தை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரி விலக்குச் சலுகை அளிக்கப்பட்டது, அந்தப் பிணையப் பத்திரமும் ஏற்றுமதி கடப்பாட்டை நிறைவேற்றும் உறுதிமொழியுடன் முறையாகச் செயல்படுத்தப்பட்டது என்று சமர்ப்பிக்கப்பட்டது. பட்டிப்பதிவுகள் தாக்கல் செய்யப்பட வேண்டிய, அறிக்கையில் இடம்பெற்ற பொருட்களைப் பொறுத்தவரை, மதிப்பீடு செய்தல், அனுமதி அளித்தல் போன்ற அனைத்துப் பணிகளும் சுங்கத்துறை ஆணையரின் (இறக்குமதி) கீழ் இயங்கும் மதிப்பீட்டு அதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்றும், தடுப்புப் பிரிவு பணியாளர்களின் பணி அறிக்கையில் இடம்பெறாத பொருட்களுடன் மட்டுமே வரம்பிடப்பட்டது என்றும் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

17. மாற்றுக் கருத்துக்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக, இந்தச் சட்டத்தின் தொடர்புடைய வகையங்களை ஆய்வு செய்வது அவசியமாகும். நமது நோக்கத்திற்குத் தொடர்புடைய இந்தச் சட்டத்தின் பிரிவு 28, செலுத்தப்படாத அல்லது

குறைவாக விதிக்கப்பட்ட அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்ட வரிக்கான தொகையைச் செலுத்துமாறு அறிவிப்பு வழங்குவது குறித்து வழிவகை செய்கிறது; அது பின்வருமாறு குறிப்பிடுகிறது :

28. வரிகள், வட்டி போன்றவற்றைச் செலுத்துவதற்கான அறிவிப்பு – (1) ஏதேனும் ஒரு வரி விதிக்கப்படாமல் இருந்தாலோ அல்லது குறைவாக விதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வட்டி செலுத்தப்படாமல் இருந்தாலோ, பகுதியாகச் செலுத்தப்பட்டிருந்தாலோ அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்டிருந்தாலோ, அந்தச் தகுந்த அதிகாரி மேற்கொள்வதாவது:–

(அ) ஒரு தனிநபரால் அவரது சொந்த உபயோகத்திற்காக அல்லது அரசாங்கத்தால் அல்லது ஏதேனும் ஒரு கல்வி, ஆராய்ச்சி அல்லது தொண்டு நிறுவனம் அல்லது மருத்துவமனையால் செய்யப்படும் எந்தவொரு இறக்குமதியாக இருக்கும் பட்சத்தில், ஓராண்டு காலத்திற்குள்ளும்;

(ஆ) இதர பிற நேர்வுகளில், ஆறு மாத காலத்திற்குள்ளும்,

தொடர்புடைய தேதியிலிருந்து, வரி அல்லது வட்டி விதிக்கப்படாத அல்லது வசூலிக்கப்படாத அல்லது அவ்வாறு குறைவாக விதிக்கப்பட்ட அல்லது பகுதியாகச் செலுத்தப்பட்ட அல்லது யாருக்குத் தவறாகத் தொகை திரும்ப அளிக்கப்பட்டதோ, அந்த நபர் ஏன் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்தக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு அவருக்கு அறிவிப்பை அனுப்ப வேண்டும்:

நிபந்தனை என்னவென்றால், இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர் அல்லது அவர்களின் முகவர் அல்லது பணியாளரின் கூட்டுச்சதி அல்லது வேண்டுமென்றே தவறாகக் கூறுதல் அல்லது உண்மைகளை மறைத்தல் ஆகியவற்றின் காரணமாக வரி விதிக்கப்படாமல் அல்லது குறைவாக விதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது வட்டி வசூலிக்கப்படாமல் அல்லது பகுதியாகச் செலுத்தப்பட்டிருந்தாலோ அல்லது வரி அல்லது வட்டி தவறாகத் திரும்ப அளிக்கப்பட்டிருந்தாலோ, இந்த உட்பிரிவின் விதிகள் 'ஓராண்டு' மற்றும் 'ஆறு மாதங்கள்' என்ற சொற்களுக்குப் பதிலாக 'ஐந்து ஆண்டுகள்' என்பது மாற்றப்பட்டது போன்ற விளைவைக் கொண்டிருக்கும்.

18. அந்தச் சட்டப்பிரிவின்படி, தன்னிடமுள்ள சான்றுகளின் அடிப்படையில், தனிநபர் பயன்பாடு அல்லது அரசாங்கம் அல்லது கல்வி, ஆராய்ச்சி, தொண்டு நிறுவனங்கள் அல்லது மருத்துவமனைகளால் செய்யப்பட்ட இறக்குமதியாக இருந்தால் ஓராண்டுக்குள்ளும், மற்ற அனைத்து நேர்வுகளிலும் தொடர்புடைய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளும், சுங்கவரி விதிக்கப்படவில்லை அல்லது குறைவாக விதிக்கப்பட்டுள்ளது அல்லது தவறாகத் திரும்ப அளிக்கப்பட்டுள்ளது என்று 'தகுந்த அதிகாரி' தனிப்பட்ட முறையில் திருப்தி அடையும்போது, சம்பந்தப்பட்ட நபருக்கு ஏன் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்தக்கூடாது என்பதற்கான காரணத்தைக் கோரும் அறிவிப்பை வழங்கலாம் என்பது தெளிவாகிறது. எனவே, அந்தப் பிரிவின் கீழான அறிவிப்பானது 'அந்தச் தகுந்த அதிகாரி'யால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பது இதிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது.

19. சட்டத்தின் பிரிவு 2(34), 'தகுந்த அதிகாரி' என்பதை பின்வருமாறு வரையறுக்கிறது:

2. வரையறைகள்.–

(34) 'தகுந்த அதிகாரி' என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட வேண்டிய பணிகளைப் பொறுத்தவரை,

வாரியத்தாலோ அல்லது சுங்கத்துறை ஆணையராலோ அந்தப் பணிகள் ஒதுக்கப்பட்ட சுங்க அதிகாரியைக் குறிக்கும்;

இந்தச் வகையங்களை சற்றே கவனித்துப் பார்த்தாலே, குறிப்பிட்ட பணிகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சுங்க அதிகாரிகள் மட்டுமே சட்டத்தின் பிரிவு 2(34)–ன் படி 'தகுந்த அதிகாரிகள்' ஆவார்கள் என்பது தெளிவாகிறது. எனவே, ஒரு 'சுங்க அதிகாரி', 'தகுந்த அதிகாரி'தானா என்பதைத் தீர்மானிப்பதற்கான முதன்மையான சோதனை, வாரியத்தாலோ அல்லது சுங்கத்துறை ஆணையராலோ அவருக்கு அந்தப் பணி குறிப்பிட்ட வகையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதுதான்.

20. சட்டத்தின் பிரிவுகள் 2(34) மற்றும் 28 ஆகியவற்றை இணைத்துப் பார்க்கும்போது, சம்பந்தப்பட்ட இறக்குமதி எந்த அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் நடந்ததோ, அந்தப் பகுதியில் வரியை மதிப்பீடு செய்தல் மற்றும் மறுமதிப்பீடு செய்தல் ஆகிய குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதற்கு, பிரிவு 2(34)–ன் படி வாரியத்தாலோ அல்லது சுங்கத்துறை ஆணையராலோ நியமிக்கப்பட்ட அந்தச் சுங்க அதிகாரி மட்டுமே பிரிவு 28–ன் கீழ் அறிவிப்பு வழங்கத் தகுதியுடையவர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. பிரிவு 28–க்கு இதைத் தவிர்த்து வேறு எந்த விளக்கத்தை அளித்தாலும், அது பிரிவு 2(34)–ன் விதிகளைப் பொருளற்றதாக்கிவிடும் ஏனெனில், அத்தகைய பணிகளைத்

திட்டவட்டமாக வழங்குவதே பிரிவு 2(34)–ன் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள சோதனையாகும்."

23. எனவே, தற்போது நம் முன்னுள்ள அனைத்து விவகாரங்களிலும், டிஆர்ஐ–ன் கூடுதல் தலைமை இயக்குநரால் காரணம் கோரி அனுப்பப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் சட்ட அதிகாரம் ஏதுமின்றி வழங்கப்பட்டவை என்பதால் அவை செல்லாதவை என்றும், அவை நீக்கறவு செய்யப்படத்தக்கவை என்றும் நாம் தீர்ப்பளிக்கிறோம்; மேலும், அதன் விளைவாக எழுந்த கோரிக்கைகளும் நீக்கறவு செய்யப்படுகின்றன.

<u>காலவரையறை</u>

24. காலவரையறை குறித்த கேள்வியைத் தீர்மானிப்பது தற்போதைய நிலையில் மிக அவசியமானதல்ல; இருப்பினும், அந்த விவகாரத்தில் சுங்க அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் குறித்துத் தரப்பினர் விரிவாக வாதிட்டுள்ளதால், இது குறித்துத் தீர்மானிக்க நாம் விழைகிறோம். காரணம் கோரும் அறிவிப்பு 19.8.2014 அன்று வழங்கப்பட்டது. பிரிவு 28(4)–ன் படி, வரி செலுத்தப்படாமல் இருந்தாலோ அல்லது குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தாலோ அல்லது கூட்டுச்சதி, வேண்டுமென்றே தவறாகக் கூறுதல் அல்லது உண்மைகளை மறைத்தல் ஆகியவற்றின் காரணமாகத் தவறாகத் திரும்ப அளிக்கப்பட்டிருந்தாலோ, அத்தகைய அறிவிப்பு

'தொடர்புடைய தேதியிலிருந்து' அதாவது பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் வழங்கப்பட வேண்டும். எனவே, இங்கு உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய்வது அவசியமாகிறது.

25. இந்த வழக்கு, 20.3.2012 அன்று பட்டிபதிவு மற்றும் கேமராக்களின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேடுகள் ஆகியவற்றுடன் சுங்க அதிகாரிகளின் பரிசீலனைக்காக முன்வைக்கப்பட்டது.

26. பட்டிப்பதிவில் சில்லறை விற்பனைக்காக பேக் செய்யப்பட்ட டிஜிட்டல் ஸ்டில் இமேஜ் வீடியோ கேமராக்கள் (கூல்பிக்ஸ் S4300, S2600 போன்றவை) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு ஆதாரமாகச் சமர்ப்பிக்கப்பட்ட கையேட்டில், '...நினைவக அட்டையில் நீண்ட நேரம் பதிவு செய்யப் போதுமான இடம் இருந்தாலும், ஒரு தனிப்பட்ட வீடியோவை அதிகபட்சமாக 29 நிமிடங்கள் மட்டுமே பதிவு செய்ய முடியும்' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது, கூடுதல் நினைவக வசதி அளிக்கும் அட்டையின் கொள்ளளவைப் பொறுத்து, ஒரு கேமரா ஒட்டுமொத்தமாக 29 நிமிடங்களுக்கு மேல் பதிவு செய்ய முடியும் என்றாலும், ஒரு தொடர்ச்சியான பதிவாக அதனால் 29 நிமிடங்கள் வரை மட்டுமே பதிவு செய்ய முடியும் என்று இது பொருள்படும்.

27. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அந்த கேமராவால் ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவுகளைச் செய்ய முடியும், ஆனால் ஒரே தொடர்ச்சியான பதிவாக 30 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் பதிவு செய்ய முடியாது. இந்த கேமரா வரிவிலக்கிற்கான நிபந்தனையைப் பூர்த்தி செய்கிறது அதாவது ஒரே தொடர்ச்சியான பதிவாக 30 நிமிடங்களுக்கும் குறைவாகவே பதிவு செய்கிறது என்ற முடிவை துணை ஆணையர் எடுத்தது இதிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த நிலையில், அந்தப் பொருட்களை வரிவிலக்கிற்குரியவை என அனுமதிப்பதில் துணை ஆணையர் எடுத்த முடிவு சரியானதா இல்லையா என்பது முக்கியமல்ல. மாறாக, இறக்குமதியாளர்கள் வேண்டுமென்றே தவறான தகவலைக் கூறினார்களா அல்லது உண்மைகளை மறைத்து பொருட்களைப் பெற்றுக்கொண்டார்களா என்பதைப் பார்ப்பதுதான் மிக முக்கியமானது.

28. இறக்குமதியாளர் 'முதல் சோதனை' செய்யுமாறு கோரியிருந்ததுடன், 20.3.2012 அன்று பட்டிப்பதிவு மற்றும் மாதிரிகளின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேடுகளுடன் கேமராக்களையும் சமர்ப்பித்திருந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஒரு தொடர்ச்சியான பதிவின் கால அளவு எவ்வளவு, அந்த ஒரு பதிவு கேமராவின் மொத்த நினைவகத்தையும் (கூடுதல் நினைவகம் உட்பட) தீர்த்துவிடுகிறதா மற்றும் அந்த கேமராக்கள் வரிவிலக்கிற்குத் தகுதியானவையா என்பதை அந்த கேமராவை இயக்கிப் பார்த்தே கண்டறிந்திருக்க முடியும். இத்தகையச்

சூழலில், உண்மைகள் வேண்டுமென்றே தவறாகக் கூறப்பட்டன என்று ஊகிப்பது கடினம். எனவே, இந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில், பிரிவு 28(4)-ன் கீழ் ஐந்தாண்டு கால நீட்டிக்கப்பட்ட காலவரம்பைப் பயன்படுத்தி வழக்கை மீண்டும் விசாரிப்பதற்கு எந்தவொரு அதிகார அமைப்பிற்கும் அதிகாரம் இல்லை என்பது உறுதியாகிறது.

29. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில், வரிவிலக்கு அறிவிப்பு எண். 15/2012-ன் கீழ் சுங்கவரி விலக்கு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட அந்த கேமராக்கள், உண்மையில் அந்த வரிவிலக்கிற்குத் தகுதியானவையா இல்லையா என்ற கேள்விக்கு பதிலளிப்பது அவசியமற்றது என்று நாங்கள் கருதுகிறோம். அந்தப் பொருட்கள் சுங்க அதிகாரியால் முறையாகவும் செல்லத்தக்க வகையிலும் அனுமதிக்கப்பட்டதாகவே கருதப்பட வேண்டும்.

30. ஐரோப்பிய கூட்டமைப்பின் ஒருங்கிணைந்த பெயரிடல் முறையின் விளக்கக் குறிப்பின் கீழ், இதேபோன்ற தொழில்நுட்ப விவரங்களைக் கொண்ட கேமராக்கள் வரிவிலக்கிற்குரியவையாகக் கருதப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுகிறோம். மேலும், 1975-ஆம் ஆண்டு சுங்க தீர்வைச் சட்டத்தின் அத்தியாயங்கள் 84 மற்றும் 85-ன் (முதல் அட்டவணை) கீழ் வழங்கப்பட்ட வரிவிலக்கு அறிவிப்புகளின்படி, இதே கேமராக்கள் 17.03.2012-க்கு முன்னதாகவும் மற்றும் 30.04.2015-க்குப் பின்னதாகவும்

வரிவிலக்கிற்குத் தகுதியானவையாகக் கருதப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுவதும் அவசியமாகும்.

31. இதன் விளைவாக, இந்த மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. புது தில்லி, செஸ்சாட்–ல் சுங்கவரி மேல்முறையீட்டு எண்கள்.50098, 50099, 50100 and 50280/2017–ல் 19.12.2017 தேதியிட்ட பொதுவான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் மூவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான வரி நிலுவைக் கோரிக்கை அறிவிப்புகளும் நீக்கறவு செய்யப்படுகின்றன.

32. தரப்பினர்கள் தங்கள் சொந்த செலவுகளை ஏற்க வேண்டும்.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."